உ
சிவமயம்

யாழ்ப்பாணம் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும், பலாலி வீதி யாழ்ப்பாணத்தை திருமணத்தின் பின் வாழ்விடமாகவும், தற்போது 23 / 10 பண்டாரி குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நீர்ப்பாசன இலாகா தொழில் நுட்ப உத்தியோகத்தர்

கிருஷ்ணர் வடிவேலு

அவர்களின் இறவி குறித்த

★ நினைவு மலர் ★

சமர்ப்பணம்

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் உதயமாகி, இட்டமுடன்
கொக்குவிலில் இனிதுறைந்து தொட்டநகர் யாழ்ப்பாணத்
துயர்ந்து நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப
அலுவலராய் ஈர்ப்புடைய கிளிநொச்சி, மட்டக்களப்பு,
திருகோணமலை, புல்மோட்டை, பாலையடி வெட்டை,
வவுனியாவிற் பணிபுரிந்து பார்ப்புயந்த பண்டாரிகுளம்
கிராம அபிவிருத்திச் சங்க செயலராய், தலைவராய்ச்
சேவையாற்றி சீர்பரவு பஞ்சாயத்துச் சேவைநல்கி, கட்டிய
மனைவியையும் பிள்ளையையும் கலங்காது கடமையே
கண்ணெனக் கொண்டு காப்பாற்றி, காரியம் முடிந்தது
காரணம் இதுவென மண்ணுலக வாழ்வை நீத்த எம்
இல்லத்திறையோன் கிருஷ்ணர் வடிவேலு அவர்களுக்கு
இம்மலர்

சமர்ப்பணம்.

மலர்வு		உதிர்வு
03		04
07		07
1940		2000



அமரர் திரு.
கிருஷ்ணர் வடிவேலு

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் மா/நீர்ப்பாசன இலாகா)

அவர்கள்

திதி நிர்ணய வெண்பா

விக்கிரம வருடமதில் விளங்குபூர்வ திருதியையில்
மிக்கதொரு ஆயிலிய சித்தமதில் ~ தக்கோன்
கிருஷ்ணர் வடிவேலு கீர்த்திசெறி யம்பலத்தான்
திருவடியிற் தேகமுறை நாள்.

பஞ்சபுராணம்

தேவாரம்

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் என்றென்றே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் கழைகண் இல்லேன்
கழலடியே கை தொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்பகலூர் மேவிய புண்ணியனே

திருவாசகம்

கடையவ னேனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டுடுதி கண்டாய்
விறல் வேங்கையின் றோல்
உடையவனே மன்னுமுத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன்
எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருப்புகழ்

தனந்த தானந் தனதன தானன – தனதான
இசைந்த ஏறும் கரியுரி போர்வையு – மெழில்நீறும்
இலங்கு நூலும் புலியதழ் ஆடையும் – மழுமானும்
அசைந்த தோடும் திங்களு மாலையும் – முடிமேதே
அணிந்த ஈசன் பரிவுடன் அருளிய – குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற – முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் – நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் – வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய – பெருமாளே



கந்தசஷ்டிக் கவசம்

காப்பு
நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர் அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கஎன்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வரக
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்அறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதிஎன்று எண்ணும்
என்தலை வைத்துஉன் இணையடி காக்க
என்உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க.
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவெல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாட் டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்

என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விடங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விடங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சமித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலைஉறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள்எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளைபென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவ ர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்

பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
தேவர்கள் சோனா பதியே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

அமரர்

திரு. கிருஷ்ணர் வடிவேலுஅவர்களின்

இறவி குறித்த

இரங்கற் பாவும் வாழ்க்கை வரலாறும்

மன்னுபுகழ் மாவிலங்கை மகிழ்தீப கற்ப
மாவருவி மடைமலியு மலர்வடமா புலவில்
இன்னுளத்து அருட்புலவர் இசைவல்லார் இவரும்
இறைபறாளை விசுவத்தனை இன்கருணா லயமும்
துன்னியுறை யாழ்நகரின் தூயவட்டூரப் பதியில்
தாவுசுழி புரவரங்கிற் தழைத்தகிருஷ் ணரும்
பொன்செல்லம் மாவணங்கும் புரிந்ததவப் பயனால்
புத்திரனாய் வடிவேலு புவனமதிற் பிறந்தார்.

பிறந்ததிரு வழகனிவர் பெருவமைப்பு புகலின்
பேசுதமிழ்த் திருமாலின் பெருநீல வண்ணம்
நிறந்தருமோர் சுருள்முடியும் நித்தலும்புன் சிரிப்பும்
நிறைந்திலங்கு நாதனைத்தாய் நல்மடியிற் தாங்கி
சிறந்திடுமோர் செம்மையது சீலமது கண்டு
சிற்றடிசில் தனையூட்டிச் சீர்குழலும் யாழும்
புறவிசையாய்ப் பாலனது புதுவிசையில் மயங்கி
பாருலகி லாட்டமதும் பலகுறும்புங் கண்டார்.

கண்டசீர் வடிவேலும் குரிசிலவன் கல்வி
கருதன்னம் ஆவென்னக் கவின்முதலாய் ஊட்டி
வண்டமிழும் ஆங்கிலமும் வரையாது வழங்கி
வாழ்விலொரு இளைஞனென வந்தவித மறிந்து
எண்டகுசீர் தொழிநுட்ப ஏடுமலி பதவி
ஏற்குநீர்ப் பாசனத்தில் இயற்றிடவா யாக்கி
பண்டமரூர் கொடுக்கவிலைப் பகர்வசிப் பிடமாய்
பாரிலினி துவந்தேற்று பண்புடனே யமர்ந்தார்.

அமர்ந்ததிருக் காளையிவர் இடைச்சங் வாழ்வாய்
அகிலத்துக் குரவரொடு ஆன்றோருங் கூடி
நமதுபேர் யாழ்ப்பாண நல்லூரி லாங்கே
நவில்சைவர் கந்தையா செல்லம்மா (பூமணி) பயந்த
கமலா வதியென்னுஞ் சுரிகுழற்சே ரணங்கை
காலம்மி மிதித்தொரு அருந்ததியைக் காட்டி
சுமந்தெரி யக்கினிச் சுடரதுஞ் சாட்சியாய்
சேரவை வாழ்த்திடச் சீர்மணம் புரிந்தார்.

புரிந்தவிச் குரிசிலும் புதுமாதும் அவனியிற்
புதுநகர் யாழ்ப்பாணப் பொன்னரங் கதனில்
விரிதமிழ் இலக்கண வள்ளுவன் வழியில்
வேனிலென இல்லற வசந்தமிதில் நனைந்து
குரிசிறுக் கேற்றவிக் குணவதி யென்னக்
குவலயம் போற்றிட வாழ்தவப் பயனாய்
பரிவுறு சுதர்சனைப் பாரினிற் பெற்று
பாரேக புதல்வனாய் பாசமது பரவினர்.

பரவிய குழவியின் பகர்குறு நடையும்
பண்மொழி வண்மொழி பலவதுங் கண்டு
நிரவிய குழலிசை யாழிசை வெறுத்து
நித்தலும் சுதர்சனின் நீள்பிற கோடி
திரவிய மென்னவித் திருமகன் பிசைந்த
தெளிகூ ழுதுவும் தேவா மிர்தமாய்
இரந்து உண்டுபே ரின்பமு மெய்தி
இகபர செல்வமிந் நன்கலம் அதுவென.

அதுவென வாங்கே ஆண்மகன் தன்னை
அழகுற வோம்பி அகரமும் ஆதியும்
முதுவிலக் கணமோ டிலக்கிய மதுவும்
முதல்வனாய் மலர்ந்திட முழுக்கல்வி யளித்துக்
குதுகல மாகக் களித்திடு போழ்தில்
காவிலங் கைசூழ் குழப்ப மதனால்
செதுசுவர் ணபுரிச் சுவிசினிற் கனுப்பி
சீரியற் தொழிலதைச் சிறப்புடன் நிறைந்தார்.

நிறைத்திடு பணியில் நீள்கிளி நொச்சி
நகர்விதி மட்டக் கிளப்பு இவையொடு
அறைதிரு கோண மலைபுல் மோட்டை
அகல்பாலை யடிசேர் வெட்டை வவுனியா
இறைபணி யென்ன இதயத் திருத்தி
இயல்கமக் காரர் இனிதுநீர் பெறவே
துறைமலி குளத்தைத் தூய்மையாய் ஆக்கித்
தூக்கியே பணியைத் துணிவுட னாற்றினர்.

ஆற்றிய சேவையில் ஆறிஓய் வடைந்து
அகன்ற சேவையில் மக்கள் சேவையாய்
ஏற்றுயர் கிராம அபிவிருத் தியாய்
எழில்மிகு செயலாள னாகவே யமர்ந்து

மாற்றுயர் தலைமையும் மகிழ்வுடன் பெற்று
மாவருஞ் சிரம தானத்தி பாங்கே
தோற்றுபண் டாரிக் குளத்தினை யாங்கே
திருத்திப் புதுக்கித் தேசத் துயர்ந்தனர்.

உயர்ந்தபே ரன்பர் பஞ்சா (யூரி) யத்தார்
உரிய சேவையில் வீதி யமைத்து
இயம்பிரு இடம்பெயர் வதனால் இல்லம்
இலையென இயம்பிய அன்பர் தமக்கு
நயப்புடன் கமத்தில் நல்லிட மளித்து
நாட்டினிற் பற்றும் நவிலுறு சிரிப்பும்
கயப்பிலா முகமும் காட்டிய வடிவும்
கண்டபேர் மக்கள் கருதிடக் கேண்மின்

கேண்மின் வடிவேலர் கிளருடன் பிறப்பாய்
கருதுஞா னேந்திரா நாகேஸ் வரியும்
நாண்மலர்ப் பாதமதை நாளுமே தொழுது
நாவாரப் புகழ்ந்திட நற்பணிகள் புரிய
ஆண்டகை சச்சிவிமல் (கிளி) நித்திரவி மைத்துனர்
ஆனந்த வரிசையில் அன்பது தொரிய
நீண்டி தேவதாஸ் செல்வராஜ்
நித்தலும் சகோதரர் நிறைதூண் பெருக்கினர்

பெருக்கிடு மன்பரின் பேசுமைத் துனிகளாய்
பேர்விமலா தேவியும் ரகுலா தேவியும் உருக்கிடு ரஜனி
செல்வமணி ராஜேஸ் வரியுமாய் பேபிசரோஜா
சகோதரி உயர்சாந்தி எனவாங்கு உளமது கவர்ந்திட
திருத்தரு வடிவேலர் தேசுடன் உறவினர்
தசையாட மண்ணிலே தழைத்த விருட்சமாய்
பருந்திடு கமத்தினிற் பலபணி புரிந்துளம்
பண்பினில் மலர்ந்து பகர்தூய வெண்மை.

வெண்மையிற் திகழ்ந்த வடிவேலர் சிந்தையில்
விளைந்திடு கவலையை வையகம் அறியுமோ
மண்ணினில் மைந்தனை ஈரைந்து வருடம்
முகம்காணாக் கவலையில் உடலது மெலிந்தே
எண்ணிய துன்ப மீதெனப் புகலா
இருந்திடு போழ்தில் இடையினிற் காலன்
பண்ணிய பாசக் கயிற்றினில் கணக்கில்
பதிந்தது ஓரான் பார்மிசை நடந்தனன்.

நடந்திட வோர்தினம் எண்சாண் உடம்பின்
நீள்பிர தனைக் கபாலத் தாங்கே
கடகட வென்னக் கனவிடி யிடித்து
காற்றுப் புடத்தைக் கலக்கிய தென்ன
திடமுறு மனைவி தேர்மனை வாழ்ந்தெனத்
தங்கிய அன்பர் உற்றார் அயலவர்
படபட வென்னிப் பதைத்தே யலறப்
பார்மிசை சைகை காட்டினர் பணத்தென.

பணித்தெனப் பரமன் பாதம் மெய்யென
பால்பொதி கயிலைப் பரம னுணர்த்திய
மணிசின் முத்திரை மாநெறி யுணர்ந்து
மாவினை களைந்து சாவினை யணைப்பமாய்
கணிதிகழ் சொற்றுப் பருக்கைத் துருத்தியை
கட்டிய மனைவி கவின்மிகு பிள்ளை
அணிசெறி யுற்றார் உறவினர் நண்பர்
அயலவர் அரற்ற ஆவியைக் களைந்தனர்.

களைந்திடு காயம் சந்தணப் படுக்கையில்
காற்றுப் பறிந்த காயம் இதுவென
இளைத்தே தேகம் இருநிலம் அகன்றென
இதுவே வந்தனை இதுவே வாழ்வென
தளைவிற கடுக்கித் திரிந்தே மயான
தணலினில் வெந்து திருவுடல் சிவத்து
விளைவினை விளம்பிட வடிவேலர் பாரில்
வெந்துநீ றாகினர் வைகம் அ.:.தே.

தேற்றம்

அன்னையும் பிதாவும் அன்பாய்
அளித்திடு சேய்க ளோடு
பொன்பொருள் செல்வம் யாவும்
பொதிந்திடு மாயை யென்ன
முன்னர்செய் வினையில் நீங்க
முற்றாக ஈசன் பாதம்
தன்னையே போற்றி செய்து
தரணியில் வாழ்வ ம.:.தே.

அமரர்
திரு. கிருஷ்ணர் வடிவேலுஅவர்களின்
இறவி குறித்த
இரங்கற் பாவும் வாழ்க்கை வரலாறும்

மன்னுபுகழ் மாவிலங்கை மகிழ்தீப கற்ப
மாவருவி மடைமலியு மலர்வடமா புலவில்
இன்னுளத்து அருட்புலவர் இசைவல்லார் இவரும்
இறைபறாளை விசுவத்தனை இன்கருணா லயமும்
துன்னியுறை யாழ்நகரின் தூயவட்டூர்ப் பதியில்
தாவுசுழி புரவரங்கிற் தழைத்தகிருஷ் ணரும்
பொன்செல்லம் மாவணங்கும் புரிந்ததவப் பயனால்
புத்திரனாய் வடிவேலு புவனமதிற் பிறந்தார்.

பிறந்ததிரு வழகனிவர் பெருவமைப்பு புகலின்
பேசுதமிழ்த் திருமாலின் பெருநீல வண்ணம்
நிறந்தருமோர் சுருள்முடியும் நித்தலும்புன் சிரிப்பும்
நிறைந்திலங்கு நாதனைத்தாய் நல்மடியிற் தாங்கி
சிறந்திடுமோர் செம்மையது சீலமது கண்டு
சிற்றடிசில் தனையூட்டிச் சீர்குழலும் யாமும்
புறவிசையாய்ப் பாலனது புதுவிசையில் மயங்கி
பாருலகி லாட்டமதும் பலகுறும்புங் கண்டார்.

கண்டசீர் வடிவேலும் குரிசிலவன் கல்வி
கருதன்னம் ஆவென்னக் கவின்முதலாய் ஊட்டி
வண்டமிழும் ஆங்கிலமும் வரையாது வழங்கி
வாழ்விலொரு இளைஞனென வந்தவித மறிந்து
எண்டகுசீர் தொழிநுட்ப ஏடுமலி பதவி
ஏற்குநீர்ப் பாசனத்தில் இயற்றிடவா யாக்கி
பண்டமருர் கொடுக்கவிலைப் பகர்வசிப் பிடமாய்
பாரிலினி துவந்தேற்று பண்புடனே யமர்ந்தார்.

அமர்ந்ததிருக் காளையிவர் இடைச்சங் வாழ்வாய்
அகிலத்துக் குரவரொடு ஆன்றோருங் கூடி
நமதுபேர் யாழ்ப்பாண நல்லூரி லாங்கே
நவில்சைவர் கந்தையா செல்லம்மா (பூமணி) பயந்த
கமலா வதியென்னுஞ் சுரிகுழற்சே ரணங்கை
காலம்மி மிதித்தொரு அருந்ததியைக் காட்டி
சுமந்தெரி யக்கினிச் சுடரதுஞ் சாட்சியாய்
சேரவை வாழ்த்திடச் சீர்மணம் புரிந்தார்.

புரிந்தவிச் குரிசிலும் புதுமாதும் அவனியிற்
புதுநகர் யாழ்ப்பாணப் பொன்னரங் கதனில்
விரிதமிழ் இலக்கண வள்ளுவன் வழியில்
வேனிலென இல்லற வசந்தமிதில் நனைந்து
குரிசிறுக் கேற்றவிக் குணவதி யென்னக்
குவலயம் போற்றிட வாழ்தவப் பயனாய்
பரிவுறு சுதர்சனைப் பாரினிற் பெற்று
பாரேக புதல்வனாய் பாசமது பரவினர்.

பரவிய குழவியின் பகர்குறு நடையும்
பண்மொழி வண்மொழி பலவதுங் கண்டு
நிரவிய குழலிசை யாழிசை வெறுத்து
நித்தலும் சுதர்சனின் நீள்பிற கோடி
திரவிய மென்னவித் திருமகன் பிசைந்த
தெளிகூ ழுதுவும் தேவா மிர்தமாய்
இரந்து உண்டுபே ரின்பமு மெய்தி
இகபர செல்வமிந் நன்கலம் அதுவென.

அதுவென வாங்கே ஆண்மகன் தன்னை
அழகுற வோம்பி அகரமும் ஆதியும்
முதுவிலக் கணமோ டிலக்கிய மதுவும்
முதல்வனாய் மலர்ந்திட முழுக்கல்வி யளித்துக்
குதுகல மாகக் களித்திடு போழ்தில்
காவிலங் கைசூழ் குழப்ப மதனால்
செதுசுவர் ணபுரிச் சுவிசினிற் கனுப்பி
சீரியற் தொழிலதைச் சிறப்புடன் நிறைந்தார்.

நிறைத்திடு பணியில் நீள்கிளி நொச்சி
நகர்விதி மட்டக் களப்பு இவையொடு
அறைதிரு கோண மலைபுல் மோட்டை
அகல்பாலை யடிசேர் வெட்டை வவுனியா
இறைபணி யென்ன இதயத் திருத்தி
இயல்கமக் காரா் இனிதுநீர் பெறவே
துறைமலி குளத்தைத் தூய்மையாய் ஆக்கித்
தூக்கியே பணியைத் துணிவுட னாற்றினர்.

ஆற்றிய சேவையில் ஆறிஓய் வடைந்து
அகன்ற சேவையில் மக்கள் சேவையாய்
ஏற்றுயர் கிராம அபிவிருத் தியாய்
எழில்மிகு செயலாள னாகவே யமர்ந்து

மாற்றுயர் தலைமையும் மகிழ்வுடன் பெற்று
மாவருஞ் சிரம தானத்தி பாங்கே
தோற்றுபண் டாரிக் குளத்தினை யாங்கே
திருத்திப் புதுக்கித் தேசத் துயர்ந்தனர்.

உயர்ந்தபே ரன்பர் பஞ்சா (யூரி) யத்தார்
உரிய சேவையில் வீதி யமைத்து
இயம்பிரு இடம்பெயர் வதனால் இல்லம்
இலையென இயம்பிய அன்பர் தமக்கு
நயப்புடன் கமத்தில் நல்லிட மளித்து
நாட்டினிற் பற்றும் நவிலுறு சிரிப்பும்
கயப்பிலா முகமும் காட்டிய வடிவும்
கண்டபேர் மக்கள் கருதிடக் கேண்மின்

கேண்மின் வடிவேலர் கிளருடன் பிறப்பாய்
கருதுஞா னேந்திரா நாகேஸ் வரியும்
நாண்மலர்ப் பாதமதை நாளுமே தொழுது
நாவாரப் புகழ்ந்திட நற்பணிகள் புரிய
ஆண்டகை சச்சிவிமல் (கிளி) நித்திரவி மைத்துனர்
ஆனந்த வரிசையில் அன்பது தொரிய
நீண்டி தேவதாஸ் செல்வராஜ்
நித்தலும் சகோதரா் நிறைதூண் பெருக்கினர்

பெருக்கிடு மன்பரின் பேசுமைத் துனிகளாய்
பேர்விமலா தேவியும் ரகுலா தேவியும் உருக்கிடு ரஜனி
செல்வமணி ராஜேஸ் வரியுமாய் பேபிசரோஜா
சகோதரி உயர்சாந்தி எனவாங்கு உளமது கவர்ந்திட
திருத்தரு வடிவேலர் தேசுடன் உறவினர்
தசையாட மண்ணிலே தழைத்த விருட்சமாய்
பருந்திடு கமத்தினிற் பலபணி புரிந்துளம்
பண்பினில் மலர்ந்து பகர்தூய வெண்மை.

வெண்மையிற் திகழ்ந்த வடிவேலர் சிந்தையில்
விளைந்திடு கவலையை வையகம் அறியுமோ
மண்ணினில் மைந்தனை ஈரைந்து வருடம்
முகம்காணாக் கவலையில் உடலது மெலிந்தே
எண்ணிய துன்ப மீதெனப் புகலா
இருந்திடு போழ்தில் இடையினிற் காலன்
பண்ணிய பாசக் கயிற்றினில் கணக்கில்
பதிந்தது ஓரான் பார்மிசை நடந்தனன்.

நடந்திட வோர்தினம் எண்சாண் உடம்பின்
நீள்பிர தனைக் கபாலத் தாங்கே
கடகட வென்னக் கனவிடி யிடித்து
காற்றுப் புடத்தைக் கலக்கிய தென்ன
திடமுறு மனைவி தேர்மனை வாழ்ந்தெனத்
தங்கிய அன்பர் உற்றார் அயலவர்
படபட வென்னிப் பதைத்தே யலறப்
பார்மிசை சைகை காட்டினர் பணத்தென.

பணித்தெனப் பரமன் பாதம் மெய்யென
பால்பொதி கயிலைப் பரம னுணர்த்திய
மணிசின் முத்திரை மாநெறி யுணர்ந்து
மாவினை களைந்து சாவினை யணைப்பமாய்
கணிதிகழ் சொற்றுப் பருக்கைத் துருத்தியை
கட்டிய மனைவி கவின்மிகு பிள்ளை
அணிசெறி யுற்றார் உறவினர் நண்பர்
அயலவர் அரற்ற ஆவியைக் களைந்தனர்.

களைந்திடு காயம் சந்தணப் படுக்கையில்
காற்றுப் பறிந்த காயம் இதுவென
இளைத்தே தேகம் இருநிலம் அகன்றென
இதுவே வந்தனை இதுவே வாழ்வென
தளைவிற கடுக்கித் திரிந்தே மயான
தணலினில் வெந்து திருவுடல் சிவத்து
விளைவினை விளம்பிட வடிவேலர் பாரில்
வெந்துநீ றாகினர் வைகம் அ.்.தே.

தேற்றம்

அன்னையும் பிதாவும் அன்பாய்
அளித்திடு சேய்க ளோடு
பொன்பொருள் செல்வம் யாவும்
பொதிந்திடு மாயை யென்ன
முன்னர்செய் வினையில் நீங்க
முற்றாக ஈசன் பாதம்
தன்னையே போற்றி செய்து
தரணியில் வாழ்வ ம.்.தே.

மனைவி பிரலாபம் (கமலாவதி)
செல்லமெனு வள்ளிமகிழ் சுந்தரஞ்சேர் வடிவேலன்
நல்லபொரு ளெந்தனுக்கு நல்கிடினும் – தொல்லுலகில்
இல்லா ளகத்திருக்க இறைகொழுநர் வீற்றிருக்கும்
வல்லதொரு வாழ்விலையே ஈங்கு.

சட்டையினி மாற்றிச் சாருலகம் வந்திடில் நீர்
இட்டமுட னெம்மனைக்கு ஏகுமென – திட்டமுடன்
வடிவேலர் தனைநினைந்து வணங்கியிரு கரம்கூப்பி
அடியிணையிற் தலைவைத்தேன் அழுது.

மகன் பிரலாபம் (சுதர்சன்)
ஏகபுத் திரனென்று எந்தனையே ஏத்தியுயிர்த்
தாகமென எனைவளர்த்த தந்தையே – தேகமது
இலங்கைதனி லிருந்து இன்னன்னை பிதாக்காணாக்
கலங்குமுந்தன் தனயனையே காண்.

கொள்ளிவைக்க ஒருவனென்று கல்வியுயர் பலவளித்து
அள்ளியெனை யரவனைத்த அப்பாவே – மெள்ளவே
தள்ளிவிட்டுத் தண்ணீரில் தத்தளிக்கும் தனயனென
எள்ளிநகை யியம்பிடற்கோ ஈங்கு.

சகோதரங்கள் பிரலாபம் – ஞானேந்திரா, நாகேஸ்வரி, செல்வமணி, ராஜேஸ்வரி (காலமானவர்), ரஜனி, சாந்தி, தேவதாஸ், செல்வராசா.
அறமுரைக்க அரசும் அருள்நிலைக்க அன்பும்
புறம்கூறா வடிவேலன் பொற்பதமே – உறவுலகில்
ஒன்றான பாசமதும் உயர்வான பிறப்பதுவும்
பொன்றுலகிற் சொந்தமதோ பேசு.

மைத்துனிமார் பிரலாபம் – விமலாதேவி, ரகுலாதேவி, பேபிசறோஜா
மைத்துனிக ளென்றெம்மை மகிழ்வுடனே யுபசரித்து
வைத்ததொரு பேரன்பால் வழிமொழிந்து – இத்தரையில்
என்புருகப் போற்றும் எம்மிறையென் றிமைநினைக்க
வன்பால் வானடைந்த தேன்.

மைத்துனர்மார் பிரலாபம் - சச்சிதானந்தம், விமலநாதன், நித்தியானந்தம், ரவிலானந்தம் ஜேசுராஜா.

சித்திரையின் நிலவென்னச் சிரித்து மகிழ்வெய்தி
இத்தரையில் இனிதுயர்ந்த அத்தானே – முத்திரைநீர்
வடிவேலன் என்றுரைக்கும் வார்த்தையது வையமதில்
துடிப்படங்கிப் போயினதேன் தூர.

பேரப்பிள்ளைகள் பிரலாபம்

வான்கலந்த நிலவினிலே வசந்தமது வாரியிறை
தேன்கலந்த திருவடிவே லொளிவிளக்கே – ஊனுடலம்
மாற்றும் சட்டையிதாய் மறலியுடை கணக்கிதென
ஏற்றுசிரு வோடுடைந்த தோ.

பெறாமக்கள் பிரலாபம்

பெற்றவும் பிள்ளைகள் போல் பெறாமக்க ளெமைநினைந்து
கொற்றவனாய் வலம்வந்த குணவடிவே – நற்றவத்து
நாதன் வடிவேலன் நாடிமனை யேகுதற்கு
ஈதெம் மனம் கூசும் இனி.

மாமியார் பிரலாபம்

மறுவில்லா மருமகனை மண்ணதனில் மகளடையப்
பெறுதலொரு பேரின்பப் பாக்கியமே – வெறுவாயால்
விம்மும் நிலைதந்த வித்தகனே வியனுலகில்
பெம்மான் பேரருள்சேர் பிரிந்து.

மருமக்கள் பிரலாபம்

பெருநிழலில் மருமக்கள் பேரமுத மொழிபேசி
உருகியுயிர் உளமதுவாய் உமைநினைக்க – இருவினையின்
பற்றறுக்கப் போதியோ பெரும்பாசந் தனைநீக்கி
உற்றகலம் உடைந்தவழதங் கூறு.

உற்றார் உறவினர் பிரலாபம்

அன்பா ரயலார் அரு நண்பர் குழாமிங்கே
உன்போ லொருவனைக் காணுமோ – நன்பிறப்பே
வருந்துயர் மக்களெல்லாம் வாழ்வதில் மாயையெண்ணி
இருந்துநாட் போக்குவதோ ஈங்கு.

ஊருக்கு உழைத்த உத்தமன்

2000 - 07 - 04ந் திகதியன்று ஊருக்கு உழைத்துக் கொண்டிருந்த உத்தமன் ஒருவரின் உயிர் பிரிந்த செய்தி எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தியது. நாம் கடந்து வந்த பாதையில் அமரர் தடம்பதித்த சுவடுகளுக்கு அஞ்சலி செலுத்த அணிதிரண்டு விட்டோம்.

அமரர் கிருஷ்ணர் வடிவேல் அவர்களின் பிறப்பிடம் வேறாய் இருந்தாலும் இருப்பிடமாய் வவுனியா அமைந்து விட்டது. வவுனியா பண்டாரிகுளம் 1992ம் ஆண்டு முதல் வாழதலைப்பட்டு 1993ம் பண்டாரிகுளம் கிராம அபிவிருந்திச் சங்கம் ஓர் சாதாரண உறுப்பினராய் தன்னை இணைத்துக் கொண்டார். பூர்விகக்குடிகளுக்கே இல்லாத ஓர் புனிதத் தொண்டும், அக்கறையும், அயராத உழைப்பும் அன்னாரிடம் இருக்கக்கண்டு, ஆனந்தமடைந்த எமது சங்க நிர்வாகிகள், அவரை நிர்வாக செயலவை உறுப்பினராய் உள்ளீர்த்துக் கொண்டனர். அத்தோடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டட நிர்மாணப்பணிகளும் அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமனின் உழைப்பால் கட்டடம் உயர்ந்து வளர்ந்து. உடல் உழைப்பை மாத்திரமன்றி பல ஆயிரங்களையும் நிர்மாணப்பணிக்காய் அர்ப்பணித்தார். ஊரின் உயர்விற்காய் தனது சொந்த நிதியினை விரையமாக்கி ஆனந்தமடைந்தாரே தவிர அல்லல் படவில்லை. அமரர் கி. வடிவேல் அவர்களின் வழுவாததுவளாத உழைப்பினால் உருவான கிராம அபிவிருத்திச் சங்கததின் இரட்டை மாடிக்கட்டடம் இன்றும் இதனை பறைசாற்றி நிற்பதனை காணமுடியும்.

நிர்வாக செயலவை உறுப்பினராய் இருந்த உத்தமன் கி. வடிவேல் அவர்களை செயலாளராக தெரிவு செய்தனர். பதவிக்கேற்றது போல் செயல்படும் செயல் வீரனாகவும் தீரனாகவும் திகழ்ந்தார். இக்காலப் பகுதியில் ஒப்பந்த வேலைகள் மூலம் அதிகளவான வருமானத்தை சங்கத்திற்கு பெற்றுதந்த பெருமை பெருமகனையே சாரும்.

பண்டாரிகுளம் விபுலானந்த பாடசாலைக்கு காணி வாங்கும் பணிக்காக் ஊர்மக்களிடம் நிதிதிரட்டிய போது அமரர் வடிவேல் அவர்கள் ஓயாது உழைத்ததை ஒரு போதும் விபுலானந்த பாடசாலை நிர்வாகம் மறந்துவிட முடியாது என்றே எண்ணுகின்றோம்.

செயலாளரை ஊர்மக்கள் பண்டாரிகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைமைப் பதவியில் அமர்த்தப்பட்ட அண்ணல் ஊர் சேவையினை உன்னத தொண்டாகக் கொண்டு தன்னையே முழுமையாக அர்ப்பணிக்க ஆயத்தமானார். அயராது

உழைத்து இக்கிராமத்தையும், சங்கத்தையும், பாலர் பாடசாலையினையும் உயர்த்திக் காட்டினார். இதனால் ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு எமது சங்கம் ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்தது. தனது சொந்த உழைப்பையும், சொத்துக்களையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சங்கத்தின் பணிக்காய் அர்ப்பணம் செய்தார்.

அன்னார் இவ்வுலகை விட்டு நீங்குவதற்கு இரு வாரங்களுக்கு முன்பு எத்தனையே ஆண்டுகளாக பல்வேறு தடங்கல்களினால் முடங்கிக்கிடந்த எமது சங்கத்தின் நூல கத்தினை திறந்து வைத்து சங்கத்தின் கனவை நினைவாக்கினார். அத்தோடு பாலர் பாடசாலையின் இடப்பற்றாக்குறையை இல்லாது செய்ய இன்னுமொரு கட்டிடத்தை நிர்மாணம் செய்வதற்கு வழிகோலப் பட்டு வரைபடமும் தயாரிக்கப்பட்டது. ஆனால் வரைபடம் கட்டடமாக உருவெடுக்கமுன் உத்தமனின் உயிரை காலன் கவர்ந்து எம் கிராமத்திற்கு சதிசெய்துவிட்டான் என்றே எண்ணத் தோன்றுகிறது. வைத்தியசாலையின் படுக்கையில் இருக்கும் போதும் அண்ணல் அவர்கள், பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி பற்றியும் சங்கத்தின் ஒப்பந்த வேலைகள் பற்றியுமே எப்போதும் கதைத்துக்கொண்டிருப்பார். இது இக்கிராமத்தின் மீது அவருக்கிருந்த பற்றுதலை எடுத்துக்காட்டி எம்மையும் சிந்திக்க வைத்தது.

எடுத்த கருமத்தில் கண்ணும் கருத்துமாய் செயல்பட்டு தனது உடல், உழைப்பு, சொத்து அனைத்தையும் சங்கத்தின் விருத்திக்காய் அர்ப்பணித்து அயராது உழைத்த ஓர் உத்தமன் எம்மைவிட்டு போய்விட்டான் என எண்ணும்போது ஒருகணம் உலகமே மாயமாகிவிடுகிறது.

உத்தமனே, ஊருக்கு உழைத்தவனே, இலட்சியங்களை விதைத்தவனே, உன் உடல் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், உன் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் என்றும் எம்மை விட்டகலாது. என்றென்றும் நீ எம்மோடு வாழ்ந்து கொண்டேயிருப்பாய். உனது இலட்சியங்கள் ஈடேறவும், உன் ஆத்மா சாந்தியடையவும் இறைவனிடம் இறைஞ்சி கண்ணீரைக் காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!

நிர்வாக செயலவை உறுப்பினர்கள்.
கிராம அபிவிருத்திச் சங்கம்,
பண்டாரிகுளம்,
வவுனியா.

வம்சாவழி


பண்டாரி + முத்துப்பிள்ளை
தங்கம்
செல்லையா
கிருஷ்ணர் + செல்லம்மா
பெரியதம்பி
ஆறுமுகம்
இலட்சுமி
கந்தையா + செல்லம்மா
சச்சிதானந்தன்
கமலாவதி
விமலநாதன்
விமலாதேவி
ரகுலாதேவி
நித்தியானந்தம்
ரவிலானந்தம்
+ வடிவேல்
சுதர்சன் (சுவிஸ்)
ஞானேந்திரா (கனடா) + பேபிசரோஜா (கனடா)
விபூஜிதா
நிரோஜிதா
சஜீவிதா
கிரீசோத்
(கனடா)
நாகேஸ்வரி + யேசுராஜா
ரூபசேயோன்

நன்றி நவிலல்

எமது இல்லாத் தலைவன் அணையாச் சுடர் கிருஷ்ணர் வடிவேலு அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு நேரிலே வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும், ஏனைய இடங்களிலிருந்து அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோர்க்கும், மயானம் வரை வந்து மரியாதை செலுத்தியோர்க்கும், அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரிகைகளிற் கலந்து சிறப்பித்தோர்க்கும், மற்றும் பலவழிகளில் உதவி ஒத்தாசைகள் புரிந்து நற்பணியாற்றிய அனைத்து உற்றார் உறவினர்களுக்கும், பலவழிகளில் உதவி ஒத்தாசைகள் புரிந்த பண்டாரிகுளம் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கட்கும், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர், ஊழியர்கட்கும்.இம்மலரை உரிய நேரத்தில் வந்து ஆக்கித்தந்த கலைமணிகதிர் சரவணபவன் அவர்களுக்கும், அச்சகத்தாருக்கும் எமது உளம்கனித்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.23/10,
மாடாசாமி கோவிலடி,
பண்டாரிகுளம்,
வவுனியா.

இப்படிக்கு
மனைவி, மகன்

SUTHAN PRINTERS
KANDY ROAD,
VAVUNIYA.